

முன்னாள் வேளாண் துறை அமைச்சர் (மறைந்த) வீரபாண்டி ஆறுமுகம் துணைவியார் லீலா ஆறுமுகம் மறைவையொட்டி வீட்டுவசதி, மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி சேலம் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும் வீரபாண்டி ஆறுமுகம் இளைய மகனுமான வீரபாண்டி பிரபு (சேலம்) இல்லத்திற்குச் சென்று அவருக்கு ஆறுதல் கூறினார்.

## தி. மு. க. தொழிலாளர் அணி

# தஞ்சை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தஞ்சை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சி.முருகேசன் அவர்களை அப்பொறுப்பி லிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **உ. நீலநாராயணன்,** (23/1, வடக்கு மடவிளாகத் தெரு, திருநாகேஸ்வரம், தஞ்சை மாவட்டம்.) அவர்கள் தஞ்சை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02-09-2025.

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றிய பாக நிலை முகவர்கள் (BLA2), பாக நிலை குழு உறுப்பினர்கள் (BLC) ஆலோசனை கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் குளவாய்ப்பட்டி சி.சண்முகம் வரவேற்பில் கீரனூர் தேவிபாலா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளரும் தஞ்சாவூர் மத்திய மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளருமான மு.மணவழகன் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகம் வெற்றி பெற பாக நிலை முகவர்கள் (BLA2) பாக நிலை குழு உறுப்பினர்கள் (BLC) ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். நிகழ்வில் முன்னாள் மாவட்ட கவுன்சிலர்கள் த.செல்வம், கை.பழனிச்சாமி, முனைவர் சி.குறிஞ்சிவாணன், அண்டக்குளம் சி.முத்து, கிள்ளனூர் ஜி.சின்னப்பா, மோசக்குடி ரவி, பெரம்பூர் காத்தையா, வீரக்குடி ராஜ்குமார், உடையாளிப்பட்டி சின்னத்துரை, கே.ஆர். கரிகாலன், வி.ராஜராஜ சோழன், ள் நாஞ்சூர் முருகேசன், செனையக்குடி சூரியமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள், பாக நிலை குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை!



தஞ்சாவூர்.செப்.4.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம், நாளை (05.09.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10:00 மணியளவில் கட்சி அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை படிவம்.

2. கழக முப்பெரும் விழா.

3. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முன்னாள் அமைச்சர் கோ.சி. மணி ஆகியோரின் பிறந்த நாள் விழா.

4. கிளை கழகம் தோறும் கூட்டம் நடத்துவது.

5. கழக ஆக்கப் பணிகள்.

குறிப்பு: மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், கூட்டத்திற்கு வருகை தரும் போது அவசியம் சரி பார்க்கப்பட்ட பி.எல்.ஏ2 , பி.எல்.சி, பி.எல்.ஒ பட்டியலை தவறாது எடுத்து வரவும்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## இன்று (4 – 9 – 2025) வியாழன் –பொதுமக்களின் கோரிக்கை ஏற்று

# அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் - கூடுதல் முன்பதிவு வில்லைகள்!

## பதிவுத் துறைத் தலைவர் அறிவிப்பு!

சென்னை, செப்.4-

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினத்தன்று பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்து பதிவுத் துறைத் தலைவர் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப் பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தற்போது ஆவணி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினங்களான இன்று 04.09.2025 அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பல்வேறு தரப்பு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

எனவே, ஆவணி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினங்களான இன்று (04.09.2025) ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு கூடுதலாக தட்கல் முன்பதிவு வில்லைகளும் வில்லைகளுடன் 4 பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவ்வறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விஜயகுமார் தலைமை! செஞ்சி ஒன்றியம்

# மழவந்தாங்கல் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, செப். 4-

செஞ்சி ஒன்றியம் மழவந்தாங்கல் ஊராட்சியில் நடைபெற்ற " உங்களுடன் ஸ்டாலின் "திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார்.ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மழவந்தாங்கல் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம்முகாம் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜ், பிரபா சங்கர் ஆகியோர் முன்னிலையில் வைத்தனர் .ஊராட்சி மன்ற தலைவர் அம்பிகா அய்யனார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அனைத்து துறை சார்பில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

முன்னதாக மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவ துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தனையும்,ரத்த அழுத்தம்,நீரழிவு நோய், சர்க்கரை,நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துமாத்திரை பெட்டகத்தினையும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்.

முகாமில் மழவந்தாங்கல், பழவலம் ஆகிய கிராமங்களிலிருந்துஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா,ஒன்றிய கவுன்சிலர்பூங்காவனம் ராமசாமி,ஊராட்சி மன்ற தலைவர் பழவலம் சேகர் ,துணைத் தலைவர் செந்தில் குமார்,நிர்வாகிகள் வாசு, திருநாவுக்கரசு,அய்யாதுரை, சிவப்பிரகாசம், திருமாவளவன், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அபிராமிஅனைவருக்கும் நன்றி கூறினார்.

## இளையான்குடி அருகே

# முன்னாள் ராணுவ வீரர் குணசேகரன் மறைவு!

## திருவுருவப்படத்திற்கு அமைச்சர்கள் கே.என்.நேரு - கே.ஆர்.பெரியகருப்பன் மலரஞ்சலி!

சிவகங்கை .செப். 4-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா விஜயன்குடி ஊராட்சி நல்கிராமத்தைச் சேர்ந்தவர் குணசேகரன். வயது 36 .இவர் ராணுவத்தில் காஷ்மீர் பகுதியில் படைவீரராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

உடல்நலக்குறைவினால் சிகிச்சைக்காக பெங்களூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை முடிந்து திடீரென்று ஏற்பட்ட உடல்நலக்குறைவினால் இயற்கையெய்தினார். இறந்து போன குணசேகரன் உடல் அவர் சொந்த ஊரான நல்கிராமத்தில் அரசுமரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. மறைந்த குணசேகரனின் நல் கிராமத்திற்கு நேற்று முன் தினம் மாலை அவரது வீட்டில் குணசேகரன் திருவுருவப்படத்திற்கு அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், கே.என்.நேரு, திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ ஆகியோர் மலர் மாலை வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். முன்னாள் ராணுவ வீரர் குணசேகரன் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் கா.வெங்கட்ராமன், வே.தமி ழ்மாறன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



ஈரோடு மத்திய மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத் தொகுதி, பெருந்துறை கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பாண்டியம் பாளையம் ஊராட்சியில் இருந்து அதிமுகவைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் முன்னாள் மாவட்ட ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் சரஸ்வதி பரமேஸ்வரன், கிளை செயலாளர்கள் பரமேஸ்வரன், வெள்ளிங்கிரி ஆகியோர் தலைமையில் ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் ம தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் பெருந்துறை கிழக்கு பெரியசாமி, கோபி ரவி, துணை செயலாளர் ரத்தினம், சலங்கபாளையம் பேரூர் செயலாளர் பழனிச்சாமி, பேரூர் துணை செயலாளர் நல்லாம்பட்டி தவசி, மாவட்ட பிரதிநிதிகள் அர்ச்சுனன், மோகன்ராஜ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஏ.வி.எம்.பாலு, சோளி பிரகாஷ், துணை அமைப்பாளர் ராயல் குமார், சலீம், ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர்கள் படையப்பா முத்துக்குமார், தமிழ்செல்வி, நாகராஜ், துணை அமைப்பாளர் விஜய் ஆனந்த் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



நீடாமங்கலம் வடக்கு ஒன்றியம் செட்டிச்சத்திரத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்புத் திட்ட முகாமில் புலவராயன் குடிக்காடு , அய்யம்பேட்டை,சோனாப்பேட்டை, முனாவல்கோட்டை ஊராட்சி மக்களின் மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு, அதற்கான உத்தரவுகளை கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், ஒன்றிய செயலாளர் நா.கவியரசு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பகலவன், மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கினர்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - க. அசோக்குமார் 8/667பி1, விக்னேஸ்வரா நகர், பூலுவபட்டி, திருப்பூர் - 641602.

துணை அமைப்பாளர்கள் - 1) து. சுந்தரமூர்த்தி 5/223, கமிட்டியார் குடியிருப்பு, கைகாட்டி புதூர், பழங்கரை, அவிநாசி, திருப்பூர் - 641654. 2) லோ. கோகுல்ராஜ் 12/153, செம்மாணி, செட்டிபாளையம், மசக்கவுண்டன் செட்டிபாளையம், சர்க்கார் சாமகுளம், திருப்பூர் - 641107. 3) ம. அபிநயா 2/258, ஆர்.கே. நகர், இந்திரா நகர், அங்கேரிபாளையம், செட்டிபாளையம், திருப்பூர் - 641603. 4) கி.முரளிதரன் 4/73, அச்சம்பாளையம், காரேக்கவுண்டம்பாளையம், பொகளூர் - 641697. 5) வி. நஞ்சுண்டசாமி 441, ஆனையூர் குப்பனூர், அன்னூர் - 641653.

### தஞ்சை மத்திய மாவட்டம்

தஞ்சை மத்திய மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஜெ.விக்னேஷ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, திரு. **ம.விவேக்பிரசன்னா**, (121, 5வது தெரு, டிபிஎஸ் நகர், மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர்) அவர்கள் தஞ்சை மத்திய மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02-09-2025.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் திருப்பூர் வடக்கு மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

தலைவர் - ர. சாந்தி 5/30ஏ, பி.எஸ். சுந்தரம் தெரு, அவிநாசி, திருப்பூர் - 641654.

துணைத் தலைவர் - எஸ். சகிலா பேகம் 2/3, ஓலப்பாளையம் மாரியம்மன் கோவில் முதல் வீதி, திருப்பூர் - 641602.

அமைப்பாளர் - செ. ராணி செந்தில் 1/75, தெலுங்கு பாளையம், பிள்ளையப்பன் பாளையம் அஞ்சல், அன்னூர் - 641653, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். வித்யானந்தி 1/427, கருப்பராயன் கோவில் வீதி, குன்னத்தூர், சாசா குளம், கோவை - 641107. 2) கே. சித்ரா தேவி 8/2896, குடோன் 4வது வீதி, பாண்டியன் நகர், பூலுவபட்டி அஞ்சல், திருப்பூர் - 641602. 3) த. பப்பிதா 3/172, நல்லி செட்டிபாளையம் அஞ்சல், அன்னூர் வழி, அன்னூர் தாலுக்கா, அன்னூர் - 641653, திருப்பூர் மாவட்டம். 4) எஸ். அமுதா 2/385/1, கௌஸ் நகர், முறியாண்டம்பாளையம் அஞ்சல், அவிநாசி தாலுக்கா, திருப்பூர் - 641655. 5) பொ. சத்தியாதேவி 55ஏ, ராஜீவ் காந்தி இல்லம், துரைசாமி நகர், திருமுருகன்பூண்டி, திருப்பூர் - 641652. 6) மு. நிலாவர்நிஷா எஸ்.வி. காலனி, நாவலர் நகர் 2வது வீதி, திருப்பூர் - 641602. 7) ம. கோமதி 3/35சி, நல்லிசெம்பியம்பாளையம், அன்னூர், திருப்பூர் மாவட்டம்.

### திருப்பூர் வடக்கு மாநகரம்

தலைவர் - கா. வேலம்மாள் 5/1089, கங்கா நகர், பி.என். ரோடு, திருப்பூர் - 641603.

துணைத் தலைவர் - எம். லதா 15/6, செல்வராஜ் 2வது வீதி, கொங்கு மெயின் ரோடு, திருப்பூர் - 641607. அமைப்பாளர் - ப. காளீஸ்வரி 1/1807ஏ, லட்சுமி நகர், தோட்டத்துப்பாளையம், கருப்பராயன் கோவில் (பின்புறம்) நெருபெரிச்சல், பூலுவப்பட்டி, திருப்பூர் - 641602.

துணை அமைப்பாளர்கள் - 1) என். தங்கமணி 57, மருதாசலபுரம் மெயின் வீதி, குமாரனந்தபுரம், திருப்பூர் - 641602. 2) சத்யா தேவி 54/1, திலகர் நகர் மெயின் ரோடு, அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652. 3) டி. தேவகி 35/36, ஆசர் மில் லேபர் குடியிருப்பு, ஓலப்பாளையம், திருப்பூர் - 641603. 4) சி. மெர்சி 1/1125, ஆர்.சி. புதூர், நெருப்பெரிச்சல், திருப்பூர் - 641602. 5) நா. அமீர்பீபீ 76, இந்திரா காந்தி காம்பவுண்ட், திலகர் நகர் முதல் வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02-09-2025.

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி



தர்மபுரி கிழக்கு மாவட்டம்,பென்னாகரம் பேரூராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமினை தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர், தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர். ஆ.மணி துவக்கி வைத்து,பெறப்பட்ட மனுக்கள் மீது அன்றைய தினமே தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.நிகழ்வில் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் பச்சியப்பன்,கிருஷ்ணன், பேரூராட்சி தலைவர் வீரமணி, பிசி அன்பழகன்,பூவண்ணன், வள்ளியம்மாள்,பவுன்ராஜ், பவுனேஷ்,ராகுல் பிரசாத் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.